8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு குடியிருப்புதாரர்கள் (வெளி யேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/75).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளி யேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/75) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுவதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

12. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளி யேற்றப்படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/75).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப்படுவதியின்றும் பாதுகாப்பதில்) மறு சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 14/1975) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 38/1961) 1961 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. அது மூன்றுண்டுக் காலத்திற்குச் செயலில் இருந்தது. பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் வாயிலாக அவ்வப்போது இச் சட்டத்தின் செல்திறன் நீட்டிக்கப்பட்டது. தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளி யேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பு அளித்தல்) சட்டத்தின் மூலம்

* 9—4—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.